பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 02 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்துத் தரப்பு மக்களின் வளர்ச்சியும் அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. மாணவர்களிடையே தேர்வு குறித்த அச்சத்தை போக்குவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி பங்குபெறும் கலந்துரையாடல் இம்மாதம் 6-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

3. நாடாளுமன்ற விதிகளை மீறி மக்களவையில் அமளியில் ஈடுபட்ட எட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடர் முழுமைக்கும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4. ஆஸ்திரேலிய தலைநகர் மெல்போர்னில் மகாத்மா காந்தி சிலை சட்ட விரோதமாக அகற்றப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. திட எரிபொருள் ஏவுகணை தொழில்நுட்பம் இன்று ஒடிஷா மாநிலம் சந்திப்பூரில் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>>

நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து தரப்பு மக்களின் வளர்ச்சியும் அவசியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் பாலாசோரில் உள்ள **Fakir Mohan** பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் எதிர்கால இலக்குகளை எட்டுவதற்கு பல்கலைக்கழகங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பட்டம் பெற்ற மாணவர்கள் சமூக பொறுப்புணர்வோடு நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பின்தங்கிய மற்றும் நலிவுற்ற மக்களின் நலனுக்காக இளைஞர்கள் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சேவை மனப்பான்மையோடு நாட்டிற்காக உழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

இளைஞர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ள அர்ப்பணிப்பு உணர்வோடு கடுமையாக உழைக்க வேண்டும் என்று கூறிய அவர்,

இளைஞர்களிடம் சமூக பொறுப்புணர்வு என்ற பண்பையும் வளர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த பல்கலைக்கழகத்தில் ஆயிரம் பேர் அமரக்கூடிய கலையரங்கத்தையும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>>

மாணவர்களிடையே தேர்வு குறித்த அச்சத்தை போக்குவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி பங்குபெறும் பரிக்ஷா பே சர்ச்சா-வின் ஒன்பதாவது கலந்துரையாடல் நிகழ்ச்சி இம்மாதம் **6**-ஆம் தேதி காலை **10** மணிக்கு இடம்பெறவுள்ளது.

தில்லியிலிருந்து பிரதமர் பங்குபெறும் இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர், ராய்பூர், குவஹாத்தி, **Devmogra** மற்றும் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் காணொலி வாயிலாக இந்த கலந்துரையாடல் நடைபெறும்.

மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

**10** மற்றும் **12**-ஆம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த நிகழ்ச்சி இடம்பெறும்.

நாடு முழுவதிலும் உள்ள மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியை கண்டு பயன்பெற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பக்கத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மாநிலங்களவையில் இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி உறுப்பினர் திரு கண்ஷியாம் திவாரி, 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், 95 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சமூக பாதுகாப்பை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ரஞ்சனி பட்டேல், குடியரசுத் தலைவரின் உரையில் நாட்டு மக்களின் உண்மை நிலை எடுத்துரைக்கப்படவில்லை என்று குறை கூறினார்.

உலக அளவில் இந்தியாவில் தனிநபர் வருமானம் மிக குறைவாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒய் எஸ் ஆர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு குல்லா பாபுராவ், உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுப்பதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு சிறப்பாக செயல்பட்டிருப்பதாக பாராட்டினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு இலக்கை எட்டுவதற்கான முயற்சிகள் சீரிய முறையில் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐந்து கோடிக்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு கான்கிரிட் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாகவும், 12 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிவசேனா உறுப்பினர் திரு மிலந்து முரளி தியோரா, இந்திய பொருளாதாரம் ஆண்டுக்கு 7 சதவீத வளர்ச்சியை பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சி பெறும் நாடுகளின் பட்டியலில் உள்ளதாக குறிப்பிட்டார்.

உலகின் பல நாடுகளும் இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள ஆர்வமுடன் இருப்பதாகவும் திரு தியோரா கூறினார்.

<<<<<>>>>>>

போதைப் பொருளின் பிடியிலிருந்து இளைஞர்களை மீட்பதற்காக கொண்டுவரப்பட்ட **Nasha Mukt Bharat** திட்டம் **25** கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளதாக சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

மக்களவையில் இதை தெரிவித்த அமைச்சர், இளைஞர்களை இப்பழக்கத்திலிருந்து மீட்டெடுக்கும் வகையில், கட்டணமில்லா தொலைபேசி எண் சேவை **1 4 4 4 6** —ஐ அறிமுகம் செய்துள்ளதாகவும் கூறினார்.

இப்பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகள் செய்து தரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருள் பழக்கத்தால் அதிகம் பேர் பாதித்த **272** மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு வீரேந்திர குமார் கூறினார்.

<<<<<>>>>>>

மக்களவையில் இன்று எட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடர் முழுமைக்கும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை மக்களவை தொடங்கியதும் காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், இந்திய — சீனா எல்லைப்பிரச்சினை, இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டனர்.

இதனால் அவை நடவடிக்கைகள் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டன.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காகிதத்தை அவைத் தலைவரின் இருக்கைக்குமுன் வீசி எறிந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, திரு மாணிக்கம் தாகூர், திரு அம்ரேந்தர் சிங் ராஜா, திரு குர்ஜித் சிங், திரு **Hidi Eden,** திரு **Dean Kuria Kose,** திரு **Prasant Padole,** திரு கிரண் குமார் ரெட்டி ஆகிய ஏழு காங்கிரஸ் உறுப்பினர்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு

வெங்கடேசனையும் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடர் முழுமைக்கும் இடைநீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை கொண்டுவந்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நடப்பு கூட்டத்தொடர் முழுமைக்கும் இந்த எட்டு உறுப்பினர்களும் இடைநீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச்சட்டம், மகளிருக்கான அதிகாரத்தையும், அவர்களுக்கான வாய்ப்புகளையும் உறுதி செய்யும் என்று வேளாண் துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதை தெரிவித்த அமைச்சர், இந்த சட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு அளிக்கப்பட வேண்டியது கட்டாயம் என்றும் கூறினார்.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பணிபுரியும் இடங்களில் குழந்தை பராமரிப்பு இல்லங்கள் அமைத்து தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் பெண்களின் பணியிடங்களுக்கு செல்வதில் தடையில்லை என்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்தில், பணிபுரிவோரின் குறைகளை தீர்ப்பதற்கான அமைப்பு உருவாக்கப்பட்டு இருப்பதாகவும், தொழிலாளர்களின் உரிமைகள், பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு இதன்மூலம் தீர்வுகாணப்படும் என்றும் திரு கமலேஷ் பாஸ்வான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மெல்போர்னில் உள்ள ஆஸ்திரேலிய — இந்திய சமுதாய வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த மகாத்மா காந்தி சிலை அடையாளம் தெரியாத சிலரால் சட்ட விரோதமாக அகற்றப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இதை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீப் ஜெய்ஷ்வால், இந்தியாவின் கடும் ஆட்சேபனை ஆஸ்திரேலிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

அகற்றப்பட்ட மகாத்மா காந்தி சிலையை உடனடியாக மீட்டு தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், காந்தி சிலையை அகற்றியவர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை

எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினர் திட எரிபொருள் ஏவுகணை தொழில்நுட்பத்தை இன்று வெற்றிகரமாக சோதித்து பார்த்தனர்.

ஒடிஷா மாநிலம் **Chandipur** கடற்பகுதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இது நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நீண்டதூரம் வானில் உள்ள ஒரு இலக்கிலிருந்து, மற்றொரு இலக்கை துல்லியமாக தாக்குவதற்கு இந்த தொழில்நுட்பம் பயன்படுகிறது என்றும், உலக நாடுகளுக்கு முன்னோடியாக இந்தியா இந்த தொழில்நுட்பத்தை கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இந்த சோதனையை வெற்றிகரமாக முடித்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

<<<<<>>>>>>

இந்திய எல்லைப்பகுதியில் சட்ட விரோதமாக ஊடுருவிய பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த ஒன்பது பேருக்கு ஒடிஷா நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறைதண்டனை விதித்துள்ளது.

இந்த உத்தரவை பிறப்பித்த புவனேஷ்வர் மாவட்ட துணை நீதிபதி, அவர்களுக்கு அபராதமும் விதித்தார்.

<<<<<>>>>>>

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

----------------------

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் தேவிகா சிகாக் 48 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

-----------------

ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அனாகத் சிங் 19-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<END>>>>>>